தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 2 | தி.பி. 2015 கடகம் 21 (5-8-84) 65 காசுகள் இதழ் எண்: 42 | பகுதி- 31-32

முதலமைச்சர்க்கு ஒரு வேண்டுகோள்!

தமிழக அரசில் 'அயலகத் தமிழர் நல்வாழ்வுத்துறை' அமைச்சுப் பிரிவை உடனே ஏற்படுத்துங்கள்!

தமிழர் வாழ்வியல் சிக்கல் உலகறிந்த ஒன்றாகி விட்டது!

பாவலரேறு அவர்களின் வெளிப்படையான அறிக்கை!

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய தமிழக முதல்வர் ம. கோ. இராமச்சந்திரனார் அவர்களுக்கு,

ஐயா, வணக்கம்.

இக்கால் உலகம் வாழ் தமிழரின் சிக்கல் உலகச்சிக்கல் ஆகி வருகிறது. தமிழர்கள் உலக நாடுகள் பலவற்றிலும் போய், கடந்த பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வாழத் தொடங்கி, இப்பொழுது அவ்வந் நாட்டுச் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப, பலவகை அரசியல், குமுகாயச் சிக்கல்களுடனும் வாழ்ந்து வருவதைத் தாங்களும் அறிவீர்கள்! ஒவ்வொரு நாட்டிலும் அவர்களுக்கு வேறு வேறு தேவைகளும் வேறு வேறு வாழ்வியல் சிக்கல்களும் உருவாகி வருகின்றன.

எல்லா நாடுகளிலும் அவர்களுக்கு உள்ள சிக்கல்களைவிட, அண்டையில் இலங்கையில் வாழும் தமிழர்களின் சிக்கல் பெரும் அரசியல் சூழ்ச்சிக்கும், குமுகாயச் சீரழிவுக்கும் ஆளாகி உலகமே தீர்க்க முடியாத ஒன்றாகி நிற்கிறது. நாள்தோறும் நூற்றுக்கணக்கான ஏதிலிகள், ஆதரவும் அடைக்கலமும் தேடித் தமிழ்த் தாயகத்திற்கும், வேறு பல நாடுகளுக்கும் வந்தவாறும் சென்றவாறும் உள்ளனர். அரசியல் முறையில் அவர்களின் சிக்கலைத் தீர்ப்பதும், அவர்களுக்கு வாழ்வளிப்பதும், தமிழக ஆட்சி நிலையில் நமக்கு இயலாததாகி இருக்கிறது. தமிழகமே வடநாட்டினரின் தில்லியாட்சிக்கு, அரசியல், குமுகாயவியல், பொருளியல், மற்றும் பண்பாட்டியல் நிலைகளுக்குப் பெரும் அடிமையாகி நிற்பதையும் தாங்கள் அறிவீர்கள். ஒவ்வொரு நாளும் இச்சிக்கல்கள் மேன்மேலும் அதிகமாகிக் கொண்டு வருவதேயல்லாமல் குறைந்தபாடில்லை. தாயகம் நாடி அடைக்கலம் தேடி வந்த அவர்களுக்கு, நம் தமிழக அரசும் ஏதோ அவ்வப்பொழுது சிறுசிறு அதரவுகளையும், வாழ்வியல் உதவிகளையும் செய்து வருகின்றதன்றி, நிலையான ஓர் அரசியல் தீர்வை நம்மால் செய்ய முடியவில்லை. அவ்வாறு செய்யவும் இன்றுள்ள நிலையில் நம்மால் முடியாது.

இலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் சிக்கலே ஒருபுறம் தீர்க்கப் பெறவியலாமல் இருக்கின்ற நிலையில், சிங்கப்பூர், மலேசியா, மொரீசியசு, பர்மா, அந்தமான், போலும் அயல் நிலங்களிலும், ஆந்திரம், கருநாடகம், கேரளம், மகாராட்டிரம் போலும் அயல் மாநிலங்களிலும், நம் தமிழர்களின் வாழ்க்கை, பெரிதும் அவலத்திற்கு உள்ளாகி வருவதை நாம் அன்றாடம் உணர வேண்டியவர்களாகி வருகிறோம்.

சிங்கப்பூர், மலேசியா வாழ் தமிழர்கள் மேலும் அங்கு வாழ்வதற்குரிய குடியுரிமை, வாழ்வுரிமை பெறமுடியாதவர்களாகி, எப்பொழுது தாயகம் திரும்புவமோ என்ற ஏக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர். பர்மா தமிழர்கள் ஏற்கனவே தம் வீடு நிலங்களையும் சொத்துகளையும் பர்மா அரசிடம் பறிகொடுத்துவிட்டு ஏதிலிகளாய் இங்கு வந்து நிற்கின்றனர். அந்தமானில் தமிழர்கள் வங்காளியர்களின் சுரண்டல்களுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாகி வருகின்றனர். மொரீசியசில் உள்ளவர்கள் தமிழ்க் கல்வி கற்பதற்கும் இயலாதவர்களாகி நம் மொழி, பண்பாடுகளை மறந்து வருகின்றனர். கருநாடகத்திலும், ஆந்திராவிலும், மகாராட்டிரத்திலும், கேரளத்திலும் வாழ்கின்ற தமிழர்களுக்குப் பலவகையான கல்வி, குடியிருப்பு, தொழில், வாழ்வுரிமை முதலிய பல இடர்பாடுகள் தலைதூக்கியிருக்கின்றன.

இந்நிலையில், உலகம் வாழ் அனைத்துத் தமிழர்களுக்கும் உள்ள அன்றாட வாழ்வியல், அறிவியல், அரசியல் போராட்டங்களுக்கு நாம் துணை போகின்றவர்களாக இருக்கிறோம். தமிழர்களுக்குரிய தாய் நிலத்தவர்கள் என்ற முறையில் அவர்களுக்குப் பலவகையிலும் உதவும் இனவியல் கடமைகள் நமக்குண்டு. அவர்களின் தாழ்ச்சியான நிலைகளை அப்படியே நாம் புறக்கணித்து விடமுடியாது. அவர்களின் தாய்மொழிக் கல்விநிலைக்கும், பண்பாட்டு அரசியல் நிலைகளுக்கும், நமக்குள்ள அதிகார நிலைகளில் நாம் அவர்களுக்கு உதவி செய்ய முடியும். இவற்றை அயல்நாட்டுச் சிக்கல்கள் என நாம் ஒதுக்கி விட முடியாது. அது நமக்குகந்த பண்பாடும் அன்று; இனநலவுணர்வு சான்ற உரிமைச் செலுத்தமும் அன்று. தன் இனத்தைத் தானே அழிக்கும் அல்லது அழியப் பார்த்திருக்கும் கொடுமையையே ஆகும்.

எனவே, நம் தமிழக அரசின் அமைச்சரவையில், அயலகத் தமிழர்களுக்கான நல்வாழ்வுத் துறை என்னும் ஒரு பிரிவை உடனே அமைத்து, உலகிலுள்ள வேறு நாடுகளில் உள்ள தமிழர்களின், அவர்களின் பல்வேறு தேவைகளின் புள்ளி விளத்தங்களை உடனடியாக நாம் திரட்டியாக வேண்டும்; அவர்களுடன் உடனே நாம் அரசியல் முறையில் தொடர்பு கொண்டு, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கான திட்டங்களைத் தீட்டியாக வேண்டும். இதற்கெல்லாம் ஒரு நிலையான தொகையைப் பலகோடி உருபாக்களை நாம் ஒதுக்கியாக வேண்டும்.

ஏற்கனவே, தமிழரல்லாத பலவேறு மொழி இன மக்கள் தமிழகத்தில் வந்து, இங்கு வாழும் தமிழர்களின் வாழ்வியல் நிலவியல் சுரண்டல்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அத்துமீறிய சுரண்டல்களையும் நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும். அதன் வழி, நம் தாயகம் நோக்கி வருகின்ற இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா, கருநாடக, மகாராட்டிரத் தமிழர்களுக்கு நாம் வாழ்வளித்தாக வேண்டும். அடிபட்டும், அல்லல்பட்டும் வருகின்ற அவர்கள் நம்மிடம் அல்லாமல் வேறு எங்கே புகலிடம் தேடிப் போவார்கள்?

எனவே, இது பற்றி நீங்கள் உடனடியாகச் சிந்தித்து, அறிஞர்களைக் கலந்து கருத்தாய்ந்து ஒரு நல்ல முடிவை விரைவில் தெரிவித்து, நடைமுறைப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம். தங்களின் நல்லெண்ணச் செயற்பாட்டை அறிய நாளும் காத்திருக்கிறோம். — பெருஞ்சித்திரன்

பர்மாவில் தமிழர்கள்

— பா. நா. இரவி பாண்டியன்

பர்மிய நாட்டிற்கு 1947-ஆம் ஆண்டு உரிமை கிடைத்தது. உரிமை கிடைப்பதற்கு அந்த நாட்டைச் சேர்ந்த 14 மொழிகள் பேசும் மக்களும் பெரும் போராட்டம் நடத்தினர்கள். இவர்கள் தொடக்கத்தில் தனித்தனியே போராடியதால் அங்கிருந்த ஆங்கில அரசு உரிமை கொடுக்க மறுத்து விட்டது. நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கையொப்பமிட்டால்தான் உரிமை (விடுதலை) வழங்குவோம் என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டது.

இதைக்கேட்ட பர்மிய மொழி பேசக் கூடிய தலைவரான போஜேவ் அவுன்சான என்பவர் தலைவர்கள் எல்லாரையும அழைத்து நமக்கு முதலில் வேண்டியது விடுதலை-உரிமை! மற்ற நம்முடைய மொழி, இனச் சிக்கல்களைப் பேச்சுவரைகளின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்று அமைவு கூறி, அனைவரையும் உரிமை வேண்டும் ஒப்பந்தத்தில் கையொப்பமிடச் செய்தார். ஆனல், பர்மா உரிமை பெற்ற மறுநாளே மற்ற 13 மொழி பேசக் கூடிய தலைவர்களையும் சிறையில் அடைத்தார். நாட்டிற்குத் தம் இனத்தின் பெயரை அஃதாவது பர்மா என்று பெயரைச் சூட்டினர். அந்த நாட்டின் ஆட்சி மொழியாகப் பர்மியமொழி ஒன்றையே நிலைநாட்டினர். மற்ற 13 மொழி பேசுபவர்கள் பொங்கியெழுந்த பொழுதெல்லாம் படைத்துறையைக் கொண்டு அடக்கினர். காலப் போக்கில் பர்மா பர்மியர்களுக்கே சொந்தம் என்ற சூழ்நிலையை உருவாக்கி விட்டார்.

1958-இல் பர்மாவில் பெரும் புரட்சி ஒன்று ஏற்பட்டது. அஃதாவது கையின் மொழி பேசக் கூடியவர்கள் அந்த நாட்டு வரலாற்றில் முகாமை இடம் பெறுபவர்கள். இவர்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் முதல் கருவிகள் ஏந்திப் பர்மியப் படையை எதிர்த்துப் போராடிப் பர்மிய நாட்டை நான்கில் மூன்று பங்கைக் கைப்பற்றி விட்டார்கள். மீதம் இருந்ததோ இரங்கூன் நகரம் ஒன்றுதான். அப்பொழுது பர்மிய அரசு இந்திய அரசின் உதவியை நாடியது. அப்பொழுது நேருவும் தயங்காமல் இந்தியப் படையை அனுப்பி வைத்தார். இந்தியப் படை இரங்கூனில் இறங்கியதைக் கேள்விப் பட்ட வுடன், முன்னேறி வந்து கொண்டிருந்த கையின இனத்து வீரர்கள் பின்வாங்கி ஓடிச்சென்றுர்கள். இவ்வாறு அந்தப் பெரும் புரட்சியை முறியடித்த பெருமை இந்திய நாட்டுக்கே சேரும்.

அன்றுமுதல் இன்றுவரை அந்த நாட்டைப் பர்மிய மக்களே ஆண்டு வருகிறுர்கள். இப்பொழுதும் மலைப்பகுதிகளில் பர்மியப் படைக்கும், மற்ற மொழிகளின் புரட்சியாளர்க்கும் மோதல்கள் நடைபெறுவது பொதுவான நிகழ்ச்சியாகி விட்டது. ஆனல் பர்மிய அரசு எந்தச் செய்தியையும் வெளி உலகுக்குத் தெரியப் படுத்துவதில்லை. செய்தித்தாள்கள் அனைத்தையும் தன் கைவயமே வைத்துள்ளது. அங்கு யாருமே அரசியல் பேசக் கூடாது என்பது சட்டம். பேசினுல் 6 மாதம் சிறைத்தண்டனை இப்பொழுதும் உண்டு.

1954-இல் இன்னொரு அரசியல் நிகழ்ச்சி நடந்தது. பர்மிய அமைச்சரவையில் உள்ள ஒருவன் அந்த நாட்டுத் தலைவராயிருந்த போஜேவ் அவுன்சான் முதல் மற்ற 13 அமைச்சர்களையும் சுட்டுக் கொன்றுன். பிறகு அவனும் தூக்கிலிடப் பட்டான். அதற்குப் பின் அந்நாட்டின் ஆளும் பொறுப்பை ஊனு என்பவர் ஏற்றுக் கொண்டார். இவரின் ஆட்சிக் காலத்தில் நம் இந்தியர்களுக்கு நல்ல சலுகைகள் அளித்தார். இவர் இந்தியர்களின மேல் அன்பும் மதிப்பும கொண்டவா. சிலகாலம் கழித்து, இவர் சில வெளிநாடுகளுக்குச் சென்று பர்மிய நாட்டின் பொருளியலை மேம்படுத்தத் திட்டமிட்டார். அத்திட்டப்படி, வெளிநாடுகளுக்குச் சென்றுர். அப்பொழுது பர்மிய நாட்டின் படைத்துறைத் தளபதிகளில் ஒருவரான போஜேவ் நேவின் என்பவரின் மேற்பார்வையில் நாடு இருக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்துச் சென்றுர்.

இதுதான் தக்க நேரம் என நினைத்து அந்தப் படைத்தளபதி, படைத்துறையின் துணைக்கொண்டு, தம்முடைய ஆட்சியதிகாரத்தின் கீழ் நாட்டைக் கொண்டு வந்தார். படைத்துறை ஆட்சியை நிறுவினுர். வெளிநாட்டுச் சுற்றுச் செலவை மேற்கொண்டிருந்த, தலைமையமைச்சர் ஊனுவுக்கு இச் செய்தி எட்டியதும் மிகவும் மனத்துயர் அடைந்தார். வெளிநாட்டிலேயே தம் வாழ்நாள் முழுவதும் கழிப்பதென்று முடிவு செய்து சப்பானிலேயே தங்கி விட்டார். அதன் பிறகு இந்தியாவிலும் பல ஆண்டுகள் தங்கியிருந்தார். பின் 1978-இல் பர்மாவுக்குத் திரும்பி அரசியல் வாழ்வைத் துறந்தார். தற்பொழுது காவி உடை உடுத்துத் துறவியாகி புத்தமத நெறிகளை மக்களுக்கு எடுத்துக் கூறிக்கொண்டு இருக்கிறார்.

போஜேவ் நேவின் தமது படைத்துறை ஆட்சியை 1960-இல் அமைத்தார் அன்றோ! அந்தச் சூட்டோடு சூடாகப பல திட்டங்கள் தீட்டினுர். அந்த நேரத்தில் (1962) இந்தியர்களும், சீனர்களும் பர்மியப் பொருளியல் மேம்பாட்டில் முகாமையாக இருப்பதைக் கண்டு பெரிதும் பொருமை கொண்டார். உடனே வெளிநாட்டவர்களின் தொழிற்சாலைகள், பல்லாயிரக் கணக்கான குறுக்க (ஏக்கர்) நிலங்கள், கோடிக் கணக்கான சொத்துகள் அனைத்தையும் தேசிய உடைமையாக்கினுர். இந்த ஏற்பாட்டினுல் பெரிதும் இழப்புற்றவர்கள் நம் இந்தியர்கள் தாம்; குறிப்பாகத் தமிழர்கள் தாம்! தமிழர்கள் பெரிதும் துயரமும் தொல்லையும் அடைந்தனர். இனி அந்நாட்டில் வாழ்வதற்கு வழியில்லை என்று கண்டனர். இதன் விளைவாக 1964 முதல் 1974 வரை ஏதிலிகளாகத் தங்கள் தாயகமான தமிழகத்திற்குத் திரும்பினர்.

படிப்படியாகப் பர்மாவில் தமிழர்களின் உரிமை பறிக்கப்பட்டது. பர்மாவில் வெளியான தமிழ்த் தாளிகைகளான தொண்டன், இரசிக இரஞ்சினி ஆகியவை தடைசெய்யப் பட்டன. வேறு நாட்டு மொழிகளில் செய்தித்தாள்கள் வெளிவரக் கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டது. பர்மாவில் திரையரங்குகளில் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய படங்கள் திரையிடப் பெற்றுவந்தன. அவற்றிலும் பெரும்பாலும் தமிழ்ப்படங்களே அதிகம் திரையிடப்பட்டு வந்தன. உடனே, பர்மிய அரசு ஒரு சட்டம் இட்டு, ‘இந்தியாவிலிருந்து ஒரு மொழிப்படந்தான் இனி வாங்கப்படும்; அது தமிழாகவோ, இந்தியோ, தெலுங்கோ எதுவாகவோ இருக்கலாம் என்று இந்திய அரசுக்குத் தெரிவித்தது. அந்தச் சட்டத்திற்குப் பின், இந்தி வெறிபிடித்த இந்திய அரசு, தமிழ்ப் படத்தையும் தெலுங்குப் படத்தையும் அனுப்புவதை நிறுத்திவிட்டு, இந்திப்படங்களை மட்டுமே அனுப்ப முடிவு செய்தது. இந்தத் தீர்மானத்திற்குபின், பர்மாவில் திரையரங்குகளில் தமிழ்ப்படம் காட்டப்பட மாட்டாது என்பதையறிந்த தமிழர்கள் மிகவும் வருத்தம் கொண்டார்கள்.

பர்மாவில் 1960-ஆம் ஆண்டுக் கணக்குப்படி இந்தியாகள் மொத்தம் 21 இலக்கம் ஆகும். இதில தமிழாகள் மட்டும் 17 இலக்கம். இதில் ஏறத்தாழ 10 இலக்கம் பேர் தமிழகம் வந்துவிட்டார்கள். இப்பொழுது ஏறத்தாழ $7\frac{1}{2}$ இலக்கம் தமிழர்களே இருக்கிறுர்கள்

இதேபோல், பர்மாவில் தனிமொழிக் கல்விக் கூடம் இருக்கக்கூடாது என்றும் பர்மிய அரசு சட்டம் போட்டது. இதனுல் தமிழர்களின் கல்விக் கூடங்கள் மூடபபட்டன. இதனுல் தமிழர்களின் கல்விநிலை மிகவும் கீழானது. தற்பொழுது பர்மாவில் உள்ள சில தமிழ்க் கோவில்களிலும், சிலரின் வீடுகளிலுந்தான் தமிழ்க்கல்வி கற்பிக்கப் பெறுகிறது. எனவே, தமிழர்களின் கல்விநிலை நாளுக்குநாள் தாழ்ந்து போனது.

1962-இல் கொண்டு வந்த தேசிய உடைமைச் சட்டத்தால் பல மேல் நாட்டுத் தொழில் முதலாளிகளும் தாக்கமுண்டார்கள். அதனுல் பர்மாவுக்கும் வெளிநாடுகளுக்கும் உள்ள தொழில் தொடர்பும் பெரிதும் கேடானது. இதனுல் பர்மியப் பொருளியல் நிலையே தாழ்வுற்றது. இக்கால் பர்மா, வளர்ச்சியுருத நாடுகளில் ஒன்ருகக் கருதப்படுகிறது. பர்மாவில் பயன்படுத்தப்பெறும் பொருள்களில் நூற்றில் தொண்ணூறு பங்கு வெளிநாட்டுப் பொருள்களே.

1960 முதல் இன்றுவரை பர்மாவில் படைத்துறை ஆட்சியே நடைபெற்று வருகிறது. அதனுல பர்மிய அரசியல் நிலைகளை வெளிநாடுகளுக்கு எட்டாத அளவுக்கு வைத்திருக்கிறுர்கள். பர்மாவில் எழுத்துரிமை, பேச்சுரிமை எல்லாம் பறிக்கப்பட்டுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. உலகிலேயே வெளிநாட்டுத் தொடர்பு குறைவான நாடு பர்மாதான். தற்பொழுது ஆளும் அனைத்ததிகார ஆட்சிக்கு எதிராகச் சிலபொழுது கிளர்ச்சித் திட்டங்கள் தீட்டப் பெற்றன. ஆனல் அவை உடனுக்குடன் முறியடிக்கப்பட்டன. அவற்றில் ஈடுபட்டவர்களுக்குத் தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டது.

பர்மாவில் நடைபெறும் கடுமையான படைத் துறை ஆட்சிப் போக்கிற்குச் சில எடுத்துக் காட்டுகளைத் தந்தால்தான் நன்கு விளங்கும்.

உலக ஒன்றியப் பேரவையின் (U.N.O. ஐ நா. முன்னுள் பொதுச் செயலாளர் திரு. ஊதாண்ட் ஒரு பர்மியர். ஆனல் அவர் பர்மாவின் படைத்துறை யாட்சிக்குச் சார்பாக இருக்கவில்லை என்ற காரணத் தால், அவர் காலமான பின அவர் சடலம் பர்மாவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனல், பர்மிய அரசு அவருக்கு ஒருவகை அரசுமதிப்பும் தராமல், அவர் சடலத்தை ஓர் ஒதுக்குப்புறமான, பொதுவான இடு காட்டிலேயே புதைத்தது. இதைக்கண்டு மனம் பொங்கிய பர்மியக் கல்லூரி மாணவர்கள் ஒரு போராட்டம் நடத்தினர். போராட்டத்தில் அனைத்துக் கல்லூரி மாணவர்களும் ஒன்று சேர்ந்து ஊதாண்ட் அவர்களின் சடலத்தைத் தோண்டி எடுத்து ஒரு கலைக்கல்லூரியின்முன் வைத்து, அதைப் பொது மக்கள் பார்வையிடவும் மதிப்புச் செலுத்தவும் செய் தார்கள். பர்மிய அரசின் போக்கைக் கண்டிக்கும்படி பொதுமக்களை மாணவர்கள் கேட்டுக் கொண்டனர்.

மாணவர்களின் இந்தச்செயலை மூன்று நாள்கள் பொறுத்திருந்து பார்த்த பர்மிய அரசு கடுமையாக மாணவர்களை எச்சரித்துச் சடலத்தை அரசிடம் ஒப்படைக்க வேண்டும்; இல்லெனில் படைவீரர்கள் சடலத்தை மீட்டு எடுத்துச் செல்வார்கள் என்று கூறியது பர்மிய அரசு கூறியதை மாணவர்கள் பொருட்படுத்த வில்லை. அடுத்தநாள் படைத்துறை அதைக் கைப்பற்றி மீண்டும் பழைய இடத்திற்கே கொண்டு போனது அப்பொழுது அங்குக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் கற்களையும் கட்டைகளையும் எடுத்துப் படைவீரர்களின் மேல் விசினுர்கள். மாணவர்களுக்கும் படைவீரர்களுக்கும் பெரும் போராட்டமாகவே நடந்தது. இப் போராட்டம் மூன்று நாட்கள் நடந்தது. அக்கால் நூற்றுக் கணக்கான மாணவர்கள் படைத்துறையினரால் சுட்டுக் கொள்ளப் பட்டனர். மாணவர் அடக்கி ஒடுக்கப் பட்டனர். 1962-க்குப் பின 1974-இல் நடந்த பெரும் புரட்சி இது. ஆனல் இச் செய்தி துளியும் வெளி உலகுக்குத் தெரியாதவாறு பர்மிய அரசு மூடி மறைத்து விட்டது.

1980-இல் அங்கிருந்த தமிழ் இளைஞர்கள் சிலரைத் தளை செய்து. தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கும் அவர்களுக்கும் தொடர்புள்ளதா என்று உசாவபபட்டது. இளைஞர்கள் எவ்வகைத் தொடர்பும் இல்லை என்று கண்டிப்பாக மறுத்தபின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆனல் அங்குள்ள பெரும்பான்மைத் தமிழர்கள் இலங்கையில் தனிநாடு கிடைப்பதை ஆவலுடன எதிர்நோக்கியுள்ளனர்.

பர்மாவில் இப்பொழுது வாழும் 7.30 இலக்கம் தமிழர்களும் தாயகம் திரும்பவே பெரிதும் விரும்புகிறுர்கள். பர்மாவிலும் பொதுநிலை அமைப்புகள் சில இருக்கின்றன. ஆனல் தமிழ்மொழிக்காகவும் தமிழர்களுக்காகவும் பாடுபடும் மன்றங்கள் மிகவும் குறைவானவையே. பர்மாவில் தமிழுக்காகவும், தமிழர்க்காகவும் அன்றுமுதல் இன்றுவரை பாடுபடுபவர் பாமா தன்மானக் கட்சித்தலைவரும், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பர்மா கிளையின் தலைவருமான ஐயா பி எசு.மணி அவர்களும், மோல்மேன் நகர் மாரிமுத்து என்பவருந்தாம். அவர்கள்தாம் பர்மாவில் தமிழாகளுக்காக உண்மையில் தங்கள் வாழ்க்கையையே ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். பர்மாவில் தமிழர் பலர் தமிழ்ப்பற்றுடனும் தமிழ்ப் பண்புடனும் வாழ்வது இவர்களைப் போலும் சிலர் முயற்சிகளினுல்தான் என்று கூறலாம்.

தமிழர்கள் பர்மாவில் அதிகமாக வாழும் பகுதிகள் கம்பை, தென்காஞ்சி(தென்காந்தன்), தாக்கேட்டா முதலியவையாகும். தமிழர்கள் பாமிய நாட்டின் உண்மையான உயர்வுக்குப் பாடுபட்டுள்ளார்கள். அவர்களுள் பெரும்பாலோர் தாயகம் திரும்பியதால் அங்குள்ள வேளாண்மை குறைந்துள்ளது. ஆனல் தமிழர்களுக்குப் பர்மியாகள் கொடுத்த பட்டம் கல்லா என்பது. கல்லா என்றுல் நடுவிட்டு நாடு வந்தவர்கள் என்று இழிவாகக் குறிக்கப்படும் ஒரு சொல். இச்சொல் தமிழர்களுக்குச் சினத்தை மூட்டுவதாகும். உண்மையில் இன்றும் தமிழர்கள் அங்கு அரத்த வெயர்வை சிநதி உண்மையாக உழைக்கிறுர்கள். பர்மாவில் கூலி தூக்குவது பெரும்பாலும் தமிழர்கள் தாம்! கடுமையான வேலைகளில் ஈடுபடுபவர்கள் எல்லாரும் தமிழர்களே ஆனல் சீனர் அவ்வாறு அல்லர். உட்கார்ந்து கொணடே வாயினுல் சம்பாதிப்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம் பார்க்க)

பெரியார் நம்மிடைப் பிறந்திரா விட்டால்

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 42 (5-8-84) பகுதி 31-32

தமிழீழப் போராளிகளை ஒன்றுபடக்கூறும் தமிழகத் தலைவர்கள், தங்களுக்குள் ஒன்றுபட்டால் என்ன?

தமிழர்களுக்குள் என்றுமே ஒற்றுமை இருந்ததில்லை. சேர, சோழ, பாண்டியரின் ஆட்சிக் காலத்திலிருந்து, இன்று வரை, அவர்கள் அரசியலிலும், இனவியலிலும்,பல்வேறு அணிகளாகவும், சாதி, மத வேறுபாடுகளின் பல்வேறு கூறுகளாகவும், குழுக்களாகவும் பிரிந்தே இருக்கிறார்கள். வரலாற்றடிப்படையில் நோக்கினால், தமிழர்களிடம் வந்து மோதிய பிற அரசர்களைப் பார்ப்பதை விட, தமிழர்கள் தங்களுக்குத் தாங்களே மோதிக்கொண்ட, கதைகளும் காட்சிகளுமே மிகுதி. தமிழர்கள் தமிழர்களாலேயேதான் அழிக்கப்பட்டு, அடக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றார்களேயொழிய,வேறு இனத்தவர்களால் அவ்வாறு செய்யப் பட்டார்கள் என்று எவராலும் சொல்ல முடியாது.

இன்றும்கூட, ஆரியப் பார்ப்பனர்களால் தமிழர்களுக்கு வரும் கேடுகளை விட; தமிழர்களுக்குத் தமிழர்களால் வரும் கேடுகளே, சுரண்டல்களே, அழிவுகளே மிகுதி. வெறும் பேச்சுக்காகவே சாக்குக்காகவே, முழுப் பழிகளையும் பார்ப்பனர்கள்மேல் போட்டுவிட்டு,நாம் நம்முடைய இழிவுகளையும், இனநலத் தாழ்ச்சிகளையும் நிலைப்படுத்திக்கொண்டு, இன்னும் சொன்னால் வளர விட்டுக் கொண்டிருக்கிறோம். பார்ப்பான் நமக்கு நேரடியாகச் செய்யும் கேடுகளை விட, நம்மவன் நமக்கு, அதிகமாக, நேரடியாகச் செய்யும் கேடுகளே அளவிறந்து காணப்படுகின்றன. பார்ப்பனீயம் என்றென்றும் தமிழர்களை மறைமுகமான கேடுகளுக்குஉள்ளாக்கும். மதப்பூசல்கள், சாதிப்பூசல்கள முதலியவற்றை உருவாக்கி வந்திருந்தாலும் கூட. அவற்றால் நாமே நம்மை அடக்கி ஒடுக்கிக் கொள்ளும் செய்திகளே செயல்களே அதிகம்.

பார்ப்பனர், அவர்கள் வகையில் அவர்களின் இனத்தைக் காத்துக் கொள்ளச் செய்கின்ற முயற்சியை நாம், மாந்த இனநலக் காப்பின் இயற்கைக் கோட்பாட்டின்படி தவறு, குற்றம் என்று சொல்லி விடமுடியாது. நமக்கு நாமே பலவகையான தீங்குகளையும், இனஅழிப்பு முயற்சிகளையும் செய்துகொண்டு பழியை அவர்கள் மீது போட்டு விடுகிறோம். பெரியார் தமிழின நல மீட்பு முயற்சியில், பார்ப்பனர்களுக்கென்று சொன்னதை விட, நமக்குச் சொன்னதே அதிகம்.

வெளிப்படையாகச் சொல்வதானால், அவர்கள் நூற்றுக்கு மூன்று பேரே! அம் மூன்று பேரும் அவர்கள் நலத்திற்கான முயற்சியைச் செய்து கொள்வதில் என்ன தவறு இருக்க முடியம்? நாம் தொண்ணூற்றேழு பேர்களாக இருந்து கொண்டு ஏன் மேலும் மேலும் தாழ்ந்து போகிறோம்? நமக்குள் என்றுமே ஒற்றுமை இருந்ததில்லை. நாமே ஒருவருக்கொருவர் சாதி பேசிக் கொண்டும், மதம் பேசிக் கொண்டும், கட்சி பேசிக்கொண்டும், நமக்குள்ளேயே ஒருவரையொருவர் அழித்துக் கொள்கிறோம். மிக மிகச் சிறுபான்மையினத்தவனான அவன், மிகமிகப் பெரும்பான்மையினத்தவரான நம்மை எப்படி இத்தனை நூற்றாண்டுகளாக அடக்கி ஆண்டு விடமுடியும்? இஃதென்ன பேதைமை! முயற்சியின்மை! சோம்பேறித்தனமான, சூழ்ச்சி நிறைந்த பேச்சு!

பார்ப்பான் நம்மைச் சாதி, மதப்பூசல்களால் வேறு படுத்தினான் என்றால், நாம் ஏன் இன்னும் விழித்துக் கொள்ளாதவர்களாக இருக்க வேண்டும்? விழித்துக் கொள்ளாத ஏழை, எளிய மக்கள் தாம் பார்ப்பனீயத்திற்கு ஆட்பட்டுக் கிடக்கிறார்கள், அல்லது துன்புறுகிறார்கள் என்றால், விழித்துக் கொண்டவனுந்தானே - அஃதாவது கற்றுத் தேர்ந்த தமிழனுந்தானே, சாதி வெறியனாகவும், மதமூடனாகவும் இருக்கின்றான்! பார்ப்பான் ஒருவன் எங்காவது ஒரு தாழ்த்தப்பட்டவனை, அல்லது பிற்படுத்தப்பட்டவனை, சாதிக்காகவோ,மதத்திற்காகவோ வெட்டிக் கொன்றான்; அல்லது குத்திக் கொன்றான் என்று கூற முடியாதே! அதுவும் இன்றைய அறிவியல் வளர்ச்சிக் காலத்தில் அவ்வாறு கூறுவதற்கு இடமே இல்லையே!

பர்மா தமிழர்கள்!.... (2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பவர்கள். சீனர்கள் அந்த நாட்டுப் பொருளியலில் மிகப்பெரும் பங்கு பெறுகிறார்கள். பர்மாவில் வாழ்ந்து கெட்டவனும் கெடுபவனும் தமிழன் தான்! பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழன் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறான். பர்மாவின பண்பாட்டில் பெரும் பங்கு பெறுவது தமிழரின் பண்பாடே!

பர்மாவில் உள்ள இந்தியத் தூதரகம் பெயரளவுக்குத்தான் இருக்கிறதே ஒழிய, இந்தியர்களின் நலன்களில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. அங்குள்ள தமிழர்களின் எதிர்காலம் அவ்வளவு நன்றாக இல்லை. அங்குள்ள தமிழ் இளைஞர்களுக்கு வேண்டிய கல்வி நூல்கள் இல்லை. தமிழ்ப்பாடங்கள் இல்லை. இந்தக் குறையையெல்லாம் தமிழ்நாட்டரசு நிறைவு செய்யவேண்டும். இப்பொழுது பர்மாவில் வாழ்ந்து வரும் தமிழர்கள் தாயகம் திரும்புவதா அல்லது அங்கேயே வாழ்வதா என்பதைத் தீர்மானிக்க முடியாதவர்களாகப் பெரும் அவல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பர்மா வாழ் தமிழர்களின் நிலைமையில் அக்கறை கொண்டு தமிழ்நாட்டரசு அவர்களுக்கு எல்லாவகை உதவிகளும் செய்ய வேண்டும்.

பர்மாவில் தெளிவாகக் கேட்கும் வானொலி அனைத்து இந்திய வானொலியின் வெளிநாட்டு ஒலிபரப்பு நிலைய வானொலி; அதையடுத்து வெரித்தாசு வானொலி; அதையடுத்து பி.பி.சி. இலண்டன் வானொலியின் ஒலிபரப்புகள்; அடுத்து மலேசியா வானொலி கொஞ்சம் தெளிவில்லாமலும், இலங்கை வானொலி அவ்வளவு தெளிவில்லாமலும் கேட்கும். பர்மாவில் வெளிவரும் ஒரே தமிழ்இதழ், மாதஇதழான தமிழ்ஒளி என்னும் இதழ் மட்டுமே.

அங்கு,இப்பொழுது நாடா ஒளிப்பதிவு(விடியோ) வழியாகப் பல புதிய புதிய தமிழ்த்திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. நாடா ஒளிப்பதிவு 1980 முதலே அங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நமது தலைமுறையிலேயே தமிழர்களுக்குத் தனி நாடு கிடைத்துவிட வேண்டும் என்பதில் பர்மாத் தமிழர்கள் அக்கறையும் ஆர்வமும் உடையவர்களாக இருக்கிறார்கள். உலகின் பல பாகங்களில் இன்னல்படும் தமிழர்களையெல்லாம் ஓங்கிக் குரல் கொடுத்து ஒரே அணியில் திரட்ட வேண்டும் என்றும், உலக அரங்கில், கிடைக்கவிருக்கும் தனித்தமிழ் நாட்டை, சப்பானைவிட, அமெரிக்காவைவிட, உருசியாவை விட ஆற்றல் மிக்க நாடாக உருவாக்க வேண்டும், உலகின் உச்சியில் தனித்தமிழ் நாடு திகழ வேண்டும் என்றும், பர்மாத்தமிழர்கள் நெஞ்சமெலாம் இனிக்க எண்ணி வருவதுடன், தமிழீழம் கிடைக்கும் அந்த நன்னாளை மிக ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்!

நம்முள் எத்தனைப்பேர். சாதிக்காகவும் மதத்திற்காகவும் வெட்டிக்கொண்டும், குத்திக்கொண்டும், அடிதடி பட்டுக் கொண்டும் சாகிறவர்கள்! இன்றைக்கு இந்த நிலை இன்னும் அதிகமாகிக் கொண்டன்றோ வருகிறது. எனவே, தமிழனின் தாழ்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் இன்றைக்கும் அவனையே காட்டிவிட்டு, அவன் மேலேயே முழுப்பழியையும் போட்டுவிட்டு, நாம் தப்பித்துக் கொள்ள நினைப்பது கொடுமை! அறியாமை! விழிப்பின்மை! சூழ்ச்சி இந்தப் பழைமைக் குற்றச் சாட்டையே இன்னும் வலுப்படுத்திக் கொண்டு பேசி விடுவதால் நம்இனம் ஒற்றுமையாகி விடாது! அதற்கு இன்றைக்குள்ள பல்வேறு கட்சியெழுச்சிகளும், சாதி, மத எழுச்சிகளுமே வலிவான சான்றுகளாகும்!

எனவே, நமக்குள் ஒற்றுமையில்லை என்பதற்கு நம்மையே குற்றங் கூறிக்கொண்டு, உணர்ந்து கொண்டு, மனந்திறந்து ஒப்புக்கொண்டு, நாம் ஒன்றுபட முயற்சி செய்வதும், மேலேற முனைவதும், முன்னேறப் பாடுபடுவதுந்தான் அறிவுடைமையே தவிர, பார்ப்பானையே நம் அனைத்துக் கீழ்மைகளுக்கும் குறைகூறிக் கொண்டு, நாம் சாதிவெறிக் குழிக்குள்ளும், மதவெறிக் கொடுமைக்குள்ளும் விழுந்து கிடப்பது அறிவுடைமையும் உண்மையான முயற்சியும் ஆகி விடாது.

இனி, இந்த மனப்போக்கின் மறுதலை உணர்வினாலதான், தமிழீழத்தை வென்றெடுக்க, தமிழீழப் போராளிகளை ஒன்றுபடுமாறு நாம் ஏதோ அக்கறையுள்ளவர்கள் போல் கூறி வருகிறோம். அவர்கள் ஒன்றுபட வேண்டும் என்பதை எந்த வகையிலும் நாம் குறை கூறி விடமுடியாது! ஆனால் இங்குள்ள தமிழகத்தலைவர்கள்-தமிழினத்தை-அதன் நலத்தை-அதன் மொழியைக் காப்பதாகக் கூறும் தலைவர்கள்-முதலில் தங்களுக்குள் ஒன்றுபட்டால் என்ன? அதனால் வரும் தாழ்ச்சி என்ன? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா, நாம்! ○

வினைதீர்குன்றன்-சீதை வாழ்க!

கடந்த விடை 8-ஆம் பக்கல் (21-5-84) திங்கள் காலை 10 மணியளவில்,நெடுநாளைய தென்மொழி அன்பரும், தமிழ்நிலம் முகவரும், தீவிர உ.த.மு.க. கொள்கை மறவரும் ஆகிய திரு. வினைதீர்குன்றன் என்னும் வேங்கடாசலத்திற்கும் செல்வி. சீதைக்கும், முகவை மா.வ. கண்டனூரர் மணமகன் இல்லத்தில் தமிழ்த்திருமணம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. திருமணச்சிறப்பு அன்பளிப்பாக உரு 51!- (ஐம்பத்தொன்று) - தமிழ்நில வளர்ச்சிக்கு வழங்கப் பெற்றது. திருமணம் செய்து கொண்ட வினைதீர்குன்றன்-சீதை இருவரும் நல்லறம் நாடிய இல்லறம் மேற்கொண்டு, எல்லா நலமும் வளமும் இனிதே வாய்க்கப் பெற்றுத் தமிழ் மொழிக்கும் இனத்துக்கும் இனிய தொண்டாற்றிப் பெயரும் புகழும் பெற்று, வையத்து வாழ்வாங்கு வாழ, நிறைந்த நெஞ்சுடன் 'தமிழ்நிலம்' வாழ்த்துகிறது.

உ.த.மு.க. முதல்வர் சுற்றுச்செலவு

5-8-84	—	இராசபாளையம் திருவள்ளுவர் மன்றம்
6-8-84	—	தளவாய்புரம் காலை—பள்ளி நிகழ்ச்சி மாலை—பாவேந்தர் விழாப் பொதுக்கூட்டம்
7-8-84	—	உ.த.மு.க. அமைப்புக் கூட்டம்
8-8-84	—	குரும்பூர் உ.த.மு.க.பொதுக்கூட்டம்
9-8-84	—	திருச்செந்தூர் பாவேந்தர் மன்றம்
10-8-84	—	காயல்பட்டினம் நடுவண் மேனிலைப்பள்ளி
11-8-84	—	ஏரல் காலை—ஆசிரியர் மன்றக் கூட்டம் மாலை—திருவள்ளுவர் சிலை திறப்பு
12-8-84	—	ஏரல் கொற்கைத்தமிழ் மன்றம் 7-ஆம் ஆண்டு விழா.

வாங்கிவிட்டீர்களா?

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் புதிய வெளியீடுகள்! விற்பனைக்கு அணியமாக உள்ளன.

1. பாவேந்தர் பாரதிதாசன் — 14.00
2. இனம் ஒன்றுபட வேண்டும் என்பது எதற்கு — 1.00
3. வாழ்வியல் முப்பது (மறுபதிப்பு) — 1.50

பழைய வெளியீடுகள்

1. கனிச்சாறு (முதல்தொகுதி) — 15.00
2. ,, (2-ஆம்தொகுதி) — 11.00
3. கனிச்சாறு (3-ஆம் தொகுதி) — 17.50
4. கொய்யாக்கனி — 9.50
5. உலகியல் நூறு — 6.50
6. ஐயை (இருபகுதிகளும்) — 9.00
7. பள்ளிப்பறவைகள் — 5.00
8. தன்னுணர்வு — 1.50
9. ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் — 2.25
10. இலக்கியத்துறையில் தமிழ்வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள் — 1.50
11. வாழ்வியல் முப்பது — 1.50

தொடர்புக்கு : மே/பா தென்மொழி, சென்னை.5.

நரியார் நாயகம் இங்கே நடந்திடும்!

0 ஆள்வோராலும் அதிகாரத்தில் உள்ளவர்களாலும் அருவருப்புச் செய்திகளும் செயல்களும், திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன.

0 இளைஞர்களைச் சிந்திக்க விடாமலும், அரசியலைப் பற்றிக் கவனம் செலுத்தாமலும் இருக்கச் செய்யும் ஏற்பாடு இது.

போராட்ட இயக்கங்கள் இதனை எதிர்த்துப் பண்பாட்டுப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும்!

— கோ. கேசவன்

அருவருப்பு இலக்கியம்:

— இன்லிறக்குக் கடைகளில் தொங்கும் பெரும்பான்மைப் தாளிகைகளின் வழவழப்பான அட்டைகளிலும் உள்பக்கங்களிலும் பெண்களின் அரை அம்மணப் படங்கள்.

— மழிதகடு(பிளேடு) முதல் பீடி வரை பொருள்களின் விளம்பரப் பலகைகளில் பெண்கள் பல கோணங்களில் அம்மணமாக்கப்பட்டுள்ளனர்.

— நாளிதழ்களில் PIN UP என்னும் பல கோணங்கள்.

— வானொலி, தொலைக் காட்சி போன்ற ஊடகங்கள் நாடகங்கள் என்ற பெயரில் தாங்கிவரும் அருவருப்பு மலக் குவியல். எட்டுத்திக்கும் நாறிக்கொண்டிருக்கும் அருவருப்பு மலத்தைச் சுமந்து திரிவதில் இங்குள்ள தாளிகைகளுக்கு இடையில் நாய்ச் சண்டையும் உண்டு. அருவருப்பைத் துர்வாசப் பார்வை பார்த்த துக்ளக் விளம்பரத்திலும் அருவருப்பு அருவருப்பு. நடிப்பு குறித்து ஒரு நடிகையின் நேருரைக்குப் பக்கத்தில் ஒரு நடிகையின் படத்தை அருவருப்பாக தாமரை போடுகிறது. போலி முற்போக்குகளின் புதுமைப்படமான ஊமைமக்(ஜனங்)களில்அனுராதா ஆடை அவிழ்ப்பு நடனம் (இவர்கள் புரட்சி ஆடையை அவிழ்த்ததைப் போன்று). அருவருப்பில் போலி முற்போக்குச்கும் பிற்போக்குக்கும் வேறுபாடு இல்லை. சந்தைக்குக் கொண்டு வந்த சரக்கை 'இப்படி அப்படித்தான்' விற்க வேண்டும்! இப்படி அனைத்துப் பக்கங்களிலும் அருவருப்பைத் தொங்கவிட்டுக் கொண்டு, 'மக்கள் அருவருப்பு, இல்லன்ன சுவைக்க மாட்டாங்க' என்ற புலம்பல் வேறு. இப்படி அருவருப்பு அங்கிங்கு என்னாதபடி எங்கும் ஒளிமயமாய்' உள்ளது.

எஃது அருவருப்பு!

இயல்புக்கு மீறியது எதுவோ அஃது அருவருப்பு!

உண்மைக்குப் புறம்பானது எதுவோ அதுவே அருவருப்பு!

தாளிகைகளிலும் துணிப்படங்களிலும் (பேனர்களிலும்) காணப்படும் படங்கள் கதைகள் மட்டுமே அருவருப்பு என நாம் நினைக்கிறோம். அவை, இயல்புக்கு மீறியதனால் வெளிப்படும் அருவருப்பு. தமிழ் நாட்டுப் பெண் வெறும் மேல்சட்டையுடன், அரைகுறைச் சட்டையுடன் வெளிவருவதில்லை. பால் உறவு, குமுகப் பழக்கங்கள் ஆகியவற்றுக்கு வரையறை உண்டு. இவற்றை மீறிக் குமுக இயல்புகளை (Social normaloy) மீறி எழுவது அருவருப்பு. கேரளாவில் கிராமப்புறங்களில் பெண்கள் முண்டுடன் வெளிவருவர். அந்த இடத்தில் அதை அருவருப்பு எனக் கருதலாமா? எனவே அருவருப்பு என்பது இயல்புக்கு மீறியது எதுவோ அஃது ஆகும்.

ஆனால் இன்றைக்கு இந்த வகையான அருவருப்பு மட்டுமே திணிக்கப்படுவதில்லை, இரண்டாம் வகையான அருவருப்பும் திணிக்கப்படுகிறது — அருவருப்பு என்றே தெரியாமல்!

உண்மைக்கு மாறான செய்திகள் திட்டமிட்டுப் பரப்பப்பட்டு வருகின்றன; போலிகளுக்குப் புகழும் மதிப்பும் அளிக்கும் வகையில் செய்திகள் வருகின்றன, இது திட்டமிட்ட, நீண்டகாலக் கண்ணோட்டம் கொண்ட அருவருப்பாகும். பத்தாயிரம் கற்களுக்கு அப்பால் நடக்கும் செய்திகள் கூட அப்பொழுதே தெரிவதற்கு ஏற்றவகையில் செயற்கைக் கோள்கள் உண்டு. ஆனாலும் நமது ஊரிலே நடந்த ஊர்வலத்தில் எத்தனைப்பேர் கலந்துகொண்டனர் என்பது குறித்துப் பலதரப்பட்ட கருத்துகள்பல செய்தித்தாள்களில்வரும். 'இலக்கக் கணக்கான பேர் அணிவகுப்பு' என்றும் 'ஊர்வலம் பிசுபிசுத்தது' என்றும் செய்திகள் வரும். நமக்கு உண்மை மறைக்கப்படுகிறது; மறுக்கப்படுகிறது. இஃது இன்னொரு வகை அருவருப்பு.

மக்களின் உண்மையான விடுதலைக்குப் பாடுபடும் புரட்சியாளர்களை, முகத்தைக் கோணலாக்கி அங்கொன்றும் இங்கொன்றும் முள் தாடியிட்டுத், தீவட்டியைக் கையில் கொடுத்துக் கொள்கைக் காரனுக்கிக்கதைகள், கருத்துப் படங்கள் போடுதல்.

இவை உண்மைக்குப் புறம்பானவை என்ற வகையில் அருவருப்பாகும்.

இவ் விரண்டு வகையான அருவருப்புகளும் வருவது குறித்து ஆளும் இனத்துக்கு முழு நிறைவு. சங்கராச்சாரியார் ஒரு பக்கத்திலும் 'சில்க் சுமிதா' எதிர்ப்பக்கத்திலும் ஒரு தாளிகையில் வருவது குறித்து நம்மில் சிலர் முகம் சுளிக்கலாம். இவர்கள் இருவரின் படங்களின் இணைவும் ஒரு மெய்ம்ம (தத்துவ)த்தின் இணைவு ஆகும். சங்கராச்சாரியார் உண்மைக்கு மாறானவற்றைச் சொல்லி அருவருப்பைப் பரப்புகிறார். சில்க் சுமிதா, இயல்புக்கு மீறிய உடல் அசைவுகளில் அருவருப்பைப் பரப்புகின்றார். எனவே இது குறித்து 'அவாள் அவாள்' முழுநிறைவுடன் இருக்கின்றனர். இரண்டுமே ஆளும் இனத்துக்குத் தேவைப்படுகிறது.

இவற்றால்

— சரியான உண்மை மக்களுக்குத் தெரியவிடாமல் தடுக்கப்படுகிறது.
— சரியான இயல்பு நெறியில் மக்கள் செல்ல நெறிப்படுத்துவதில்லை.
— ஆளும் இனம் இன்றைக்குத் தாக்குதல் முறையில் படையெடுத்து வருகிறது.
— இளைய தலைமுறை கெடுகிறது. மக்களுக்குச் சரியான அரசியல் செல்லவில்லை.

குமுக மாற்றத்துக்கான போராட்டத்தில் இளைய தலைமுறைக்குப் பெரும் பங்குண்டு படித்த, எளிய இளைய தலைமுறை வேலையின்றி அல்லது அரைகுறை வேலையுடன் உள்ளது. இந்த நெருக்கடிக்குக் காரணமான ஆளும் இனம் இளைய தலைமுறையைக் காப்பாற்றாது. இளைஞர்கள் தங்களின் சிக்கல்களைக் கையில் எடுத்துக் கொள்ளாமலும் தங்களது சிக்கல்களைத் தாங்கள் தெரிந்து கொள்ளாமலும் இருக்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் உள்ளன. அருவருப்பு இலக்கியங்களின் புற்றீசல் புறப்பாட்டுக்கு இஃது ஒரு காரணம். சரியான அரசியல் இளைஞர்களைச் சென்றடையா வண்ணம் தடுக்கப்படுகின்றது.

மேலும், பெண்களைக் கவர்ச்சிப் பொருளாக்குவதற்கு ஒரு கருத்தியல் அடித்தளம் உண்டு.

நமது குமுகம் மூடுண்டதாகும். பருவமடைந்த ஆணும் பெண்ணும் சந்திப்பதும் பழகிக் கொள்வதும் குமுகக் கட்டுக் கோப்புகளால் இறுக்கமாகி உள்ளன. எனவே இருபாலருக்கும் ஒருவருக்கொருவர் இயல்பாக உள்ள உடலியல் ஆர்வம் (Biological curiosity) அதிகமாவதற்கே இங்கே வாய்ப்பு உண்டு. இந்த ஆர்வத்திற்குரிய நிழல்தீனியை இன்றைக்குத் தாளிகைகளும் திரைப்படங்களும் இடுகின்றன. மேலும் இன்றுள்ள குமுகக் கொடுமையால், பருவமடைந்ததற்கும் மணமாவதற்கும் இடையிலான காலம் மிக நீண்டுள்ளது. எனவே நிறைவேற்ற விருப்பப்படும் பாலியல் ஆர்வங்கள் இளைய தலைமுறைக்கு இருப்பதில் தவறோ வியப்போ இல்லை. இதற்குத் தீனி போட 'கனவுக் கன்னி'களும் 'PIN UPகளும்' படையெடுத்துள்ளன.

இந்த அருவருப்பு, இழிவுகளிடமிருந்து இளைய தலைமுறை உள்ளிட்ட மக்களை மீட்டெடுக்க வேண்டும். மக்களை அருவருடபில் வைத்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்கள் பகை ஆற்றல் முகத்திரையைக் கிழித்து உண்மையை வெளிக்கொணர வேண்டியது, புரட்சியான மக்கள் நாயக உணர்வு கொண்ட இயக்கங்களின் பண்பாட்டுக் கடமையாகும். ஆளும் இனம் வீசும் பண்பாட்டுச் சீரழிவை இத்தகைய இயக்கங்கள்தாம் வழித்தெறிய முடியும்.

— நன்றி, 'மனஓசை' சூலை'84

கச்சத்தீவின் இறால்மீன்வருவாய் போயிற்றே!

தமிழகத்தின் எல்லைகளைச் சுருக்குவதில் நடுவணரசு ஆவல் கொள்ளுகிறது!

தங்கச்சிமடம் மீனவர்கள் கவலை, நாளுக்கு நாள் அதிகமாகிறது!

சீரும் சிறப்புடனும் பேரும் புகழுடனும் வாழ்ந்த தமிழ்ப்பேரினம் இன்று தன் சொந்த நாடுகளில் ஒண்ட வந்த பிடாரிகளால் சிறுபான்மையாகி ஒடுக்கப்பட்டு வருவது உலகறிந்த செய்தி. நமக்குள் நாமே முட்டி மோதிக் கொண்டும் கட்டிப் பிடித்துக் கலாம் விளைவித்துக் கொண்டும் அழிந்து வருகின்றோம். எத்தனைப் பெரியார் அண்ணா இனித் தோன்றினாலும் எத்தனைப் பாவலரேறு பாவேந்தர் கலைஞர் இனி அனல் பறக்கும் பேச்சுக்களால் தமிழரைத் தட்டி எழுப்பினாலும் விளைகின்ற பயன் கடுகளவாவது இருந்தால் நன்றாயிருக்குமே!

இந்த இரேமேசுவரம் தீவுவாழ் மீனவர்கள் இப்போதெல்லாம் இயற்கைக்கு அஞ்சி வாழ்ந்ததுபோக சிங்களக் காடையர்க்கும் அஞ்சி அஞ்சிச் சாக வேண்டியுள்ளது. கச்சத்தீவினைத் தாரை வார்த்துக் கொடுத்தபின் வெளிநாட்டுச்செலவாணியை ஈட்டித் தரவல்ல இரால் மீன்பிடிப்பு நமக்கு மிக அருகில் உள்ள கச்சத்தீவில் நடந்து வந்தது. அங்குதான் அந்தமீன் மிகுதியாகக் கிடைக்கின்றது. அன்றாட வாழ்வின் அவலநிலையில் இருந்த மீனவரை அம் மீன் பிடிப்பு ஓரளவு வாழ்க்கை வளம் பெறச் செய்தது.

கச்சத்திவு இன்று அவர்க்குச் சொந்தமாக்கப்பட்டு விட்டது. தமிழகத்தின் எல்லைகளைச் சுருக்குவது நடுவணரசிற்கு ஆவல் போலும் சிறப்பான இயற்கை எல்லையாக இருந்த அந்தத்தீவு இன்று நம் மினத்தைக் கருவோடு அழிக்கும் ஒரு கருவியாகப் பயன்படுகிறது. அங்கு மீன்பிடிக்கச் செல்வதே இல்லை. இருப்பினும் அங்கு நிறுத்தப்பட்டிருக்கும் சிங்களக் காவல்படை நம் எல்லைக்குள் நுழைந்து நம் மீனவர்களை விரட்டிப் பிடிப்பதும் பிடித்து வைத்திருந்த இரால்மீன்களை அள்ளிப் பறிப்பதும் அவர்களைப் பிடித்துத் தலைகீழாகக் கட்டி விட்டு உடலைச் சிதைப்பதும் அன்றாட வேலையாகி விட்டது. உணவிற்கே வழியில்லாது கடலில் சென்று மீன் பிடிப்பதன் வழி வாழ்க்கையை ஓட்டலாம் என்று சென்றால் அந்த நரிகளிடமும் வரிகளிடமும் சிக்கி உடற்சிதைவு ஏற்பட்டுத் திரும்ப வேண்டியுள்ளது. விடுதலைப் புலிகட்கு பயிற்சியாடா கொடுக்கின்றீர்கள். தமிழன்களால் எங்களை அழிக்க முடியுமாடா என்று துமுக்கியால் அடிப்பதும் சொல்லவே எழுதவே ஒவ்வா இழிவைச் செய்வதும் எண்ணவே கசக்கிப் பிழிகின்றது.

விசைப்படகு காணவில்லையே என்று தேடச் சென்ற தங்கச்சிமடம் அருளானந்தம் மற்றும் ஒன்பது பேர்களைப் பிடித்துச் சென்று கொடுமைப் படுத்தி இருக்கின்றனர். ஒன்றரை மாதங்கள் வைத்துச் செயவர்த்தனாவின் இந்திய வருகையை வைத்து விடுவித்துள்ளனர். அவர் இங்குவந்து எங்களைக் கொன்றிருந்தாலும்தாழ்வில்லை. உயிரோடு அணு அணுவாகச் சாக வைத்துள்ளார்களே என்று கண்ணீர் வடிக்கின்றார். உடம்பெல்லாம் புண்கள். அந்த அளவிற்கு நுண் சிதைப்பு. இங்கோ அந்தக் காட்டேரிக்குச் (செயவர்த்தனாவிற்குச்) சிறப்பான வரவேற்பு. பட்டுக் கம்பளம் விரித்து ஆ! ஆ! அப்பப்பா! சிவப்புப் பட்டுக் கம்பளமாகும். ஒருவேளை ஈழத்தில் பெருக்கெடுத்தோடிய தமிழரின் குருதிதான் பட்டுக்கம்பளமாகியதோ. அதில்தான் அந்தக் காடை நடந்து வந்ததோ?

தமிழா இனம் கண்டு கொள். இனியாகிலும் விழி! உனக்குள்ள வேற்றுமையை மற, ஒன்றுபடு. போராடு. அப்போதுதான் உன்னினம் உலகில் இருக்கும். இன்றேல் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும்.

'அந்த நன்னாள் விரைவில்வரும் விரைவில்வரும்-
எய்மோர்.
அரசமைத்த செய்தியினை முரசொலித்துக்
காட்டும்!

— வல்வில் ஓரி

பார்ப்பன நஞ்சு பரப்பிய கொடுமையின்

தொடர் : 3 :

உலகத் தமிழின முன்னேற்றக் கழகக்

கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத் தொடர்

— நிகழ்ச்சிச் சுருக்கம் —

உரவோர் ஐந்தாம் நாள் (25-5-84) பிற்பகல் சித்தர் குன்றத்தின் உச்சிக்குச் சென்று கழகக் கொடியினை நாட்டி, உரக்க முழக்கங்களிட்டுவிட்டு இருள் சூழ்வதற்குள் திரும்பவேண்டி விரைந்து குன்றத்தினின்று இறங்கினர்.

ஏறத்தாழ ஏழு மணியளவிற்கு அனைவரும் தங்குமனைக்குத் திரும்பி சிறிதுநேரம் ஓய்வெடுத்தனர்.

தனித்தனிக் குழுவினராகப் பிரிந்து பேசிக் கொண்டிருந்த அனைவரையும் கழக முதல்வர் அழைத்துச் சித்தர் குன்றம் சென்று வந்த செய்திகள் பற்றிக் கேட்டுவிட்டு, மாலையில் வந்திருந்த மார்க்கிய அறிஞர் 'குணா' அவர்களையும் கொண்டு கலந்துரையாடலில் பல அரிய கருத்துகளைக் கூறினார்கள். தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைபற்றிச் சில அரிய விளக்கங்களைக் கொடுத்தபின் அன்றைய முழுநாள் நிகழ்ச்சியும் நிறைவுற முடிவுற்றது.

இரவு மின்சாரம் இல்லாமல்போய், நீண்ட நேரம் கழித்து வந்ததால் இரவு உணவு அனைவர்க்கும் 11 மணியளவிலேயே படைக்கப்பெற்றது.

சோர்வுற்றிருந்த உரவோர்கள் மிகுந்த களைப்புடன் உறங்கி விழித்து அடுத்தநாள் வகுப்பிற்கு அணியமாயினர்.

ஆறும்நாள் வகுப்பு ஆய்வாளர் மாளிகையின் எதிர்ப்புறத்தில் நடைபெற்றது. 6-30 மணியளவில் நாடாப்பதிவில் தமிழ்வாழ்த்து ஒலிபரப்பப் பெற்ற பின் காலை வகுப்பிற்குத் தென்னார்க்காடு (தெற்கு) மாவட்டச் செயலரும், பயிற்சி வகுப்பு கணக்கு வழக்குகளை அன்றன்றைக்குப் பதிந்துகொண்டிருந்தவரும் ஆகிய திரு. செ. வ. புகழேந்தி அவர்கள் தலைமை தாங்கினார்கள். நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் தாரை-தமிழ்வென்றி உணர்வுபொங்க வரவேற்றார். தனித்தமிழ் நாட்டின் தேவைபற்றியும், அதில் பொதுவுடைமை விதைப்பு பற்றியும் சுருக்கமாகக் கூறிவிட்டு அனைவரையும் வரவேற்றமர்ந்தார்.

தலைவர் திரு. புகழேந்தி தம் தென்மொழி ஈடுபாட்டையும், அணைப்பட்டி நிகழ்ச்சியின் இன்றியமையாமையையும் தெளிவுற விளக்கிவிட்டு வகுப்பெடுக்க வந்திருந்த மார்க்கிய அறிஞர் திரு. குணா அவர்களின் உயர்தனிச் சிறப்பைக் கூறி அவரை வகுப்பெடுக்க அழைத்து அமர்ந்தார்.

'தமிழியப் பொதுவுடைமை' எனும் தலைப்பின் கீழ் வகுப்பெடுக்க வந்திருந்த மார்க்கிய அறிஞர் குணா அவர்கள், முப்பது பக்க அளவில் நீண்ட விளக்கமான அறிக்கை ஒன்றை உருட்டச்சு செய்து வந்திருந்து அவற்றை உரு 1 மேனி அனைவர்க்கும் கொடுத்துவிட்டுத் தம் அறிக்கையைப் படித்து விளக்க மளித்தார்.

தமிழின அடிமைத்தனத்தையும் அவ்வடிமை நிலையை விடிவு பெறவைக்க இக்கால் உருவாகி இருக்கும் பல இயக்கங்கள் பற்றியும் அவற்றுள் பலவற்றின் போலிமையான போக்குகள் பற்றியும் விளக்கிக்கூறினார். தம் உரைமுடிவில் ஐயப்பாடுகள் இருப்பின் தாம் விடைகூறுவதாகக் கூறியதை அடுத்து, புலவர் தமிழ்மாறன், திரு. தென்னவன்கோ, திரு. ஒடவை ந. தமிழ்வேந்தன் ஆகியோர் கேட்ட கேள்விகளுக்கு திரு. குணா மிகவும் பொறுமையாக விடைகூறினார்.

அயர்லாந்து, வங்கநாடு ஆகியவற்றின் விடுதலையைத் தாம் முழுமையான விடுதலையாக ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், பிற இன ஆளுமையினின்று விடுதலை பெறுவதைவிட, தம்மின முதலாளிய ஆளுமையினின்று உரிமை பெறுவது, விடிவு பெறுவது மிகவும் கடினமானது என்றும், கருத்துகள் என்பன உலக அளவில் பொதுவானவை அவற்றை எவ்வினத்தினரும் தம் தேவைக்கேற்ப ஏற்றுக் கொள்ளலாம் என்றும் பலதரப்பட்ட கேள்விகளுக்கு விடைகூறியபின் தம் பேச்சை முடித்துக்கொண்டார்.

இறுதியில் கழகமுதல்வர் ஐயா அவர்கள் தனித்தமிழ் நாட்டின் தேவைபற்றியும், அதில் பொதுவுடைமைப் பொருளியல் நிலையின் இன்றியமையாமை பற்றியும் சுருக்கமாக விளக்கியபின் பத்து நிமைய அளவிற்கு இடை ஓய்வு கொடுக்கப் பெற்றது. அவ்விடை நேரத்தில் திரு. குணா அவர்கள் அனைவரிடமும் கூறிக்கொண்டு விடைபெற்றுச் சென்றார்.

அவ்வகுப்பைத் தொடர்ந்து 'தமிழ் இலக்கண அமைப்பு' எனுந்தலைப்பை முன் வைத்துக் கோபி, அரசினர் கல்லூரித் துணை முதல்வர் பேரா. அரங்கச் செல்வனார் அவர்கள் வகுப்பெடுத்தார்கள். உலக முதன் மொழியாகிய தமிழ்மொழியில் அறிவியலடிப்படையில் அமைந்துள்ள இலக்கணச் செறிவையும், செழுமையான அமைப்பு முறைகளையும் விளக்கினார். மேலும் தமிழ் இலக்கணம் பொதுவான நெறி முறைகளைக் கூறுவனவாக அமையாமல் நில அமைப்பு, மக்கள் வாழ்க்கை, காலச்சிறப்பு இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள உதவும் சிறந்த கருவியாக அமைந்திருப்பதையும் சில எடுத்துக்காட்டுகள் காட்டி அழகுற அமைவாக விளக்கினார்கள் இறுதியாக நன்றியுரை கூறிய பல்லடம் திரு அ. பு. தங்கவேல் அவர்கள் தென்மொழி எழுதியிருந்தபேரா (சையா)சிரியரின் பொய்ம்மை உரைகளை எடுத்துக்கூறி அதுபோலுங் குறைகூறித் திரியும் உளத்தினரை அருகில் இணைத்துக்கொள்ளக் கூடாது என்றுக்கூறி விட்டு, நன்றியுரை கூற அன்றைய காலை வகுப்பு நிகழ்வு முடிவுற்றது.

பிற்பகல் வகுப்பு 3 மணியளவிற்குத் தொடங்கப் பெற்றது. அவ்வகுப்பிற்குப் பெரிய குளம் வட்டத் தலைவர் திரு. கல்லை. பெருஞ்சித்திரன தலைமை தாங்க, உரவோர்கள் அனைவரையும் நெல்லை (தெற்கு) மாவட்டப் பொருளரும், ஏறத்தாழ ஐந்தாண்டுகளுக்குமேல் தென்மொழியில் அருந்தொண்டாற்றியவரும், உரத் தமிழ் மறவருமாகிய திரு. த. அன்பழகன் வரவேற்றுப் பேசினார்.

பிற்பகல் வகுப்பை நீண்டநாள் தென்மொழி அன்பரும், சென்னை மாவட்ட அமைப்பாளரும் ஆகிய திரு. ப. முருகவேள் ஏற்று நடத்தினார். 'தற்காலக் கலப்பட அரசியல்' எனுந்தலைப்பின்கீழ் கடந்த காலத் திராவிட இயக்கங்களின் செயல்பாடுகளையும், அவற்றில் சில தொய்வான நிகழ்வுகளையும் விளக்கப்படுத்திவிட்டு, இக்கால முகாமைத் தேவை தனித்தமிழ் நாடே எனத் தம் உரையை முழுமைப்படுத்தினார்.

பத்து நிமைய இடைவெளிக்குப்பின்னர் சொல்லாய்வறிஞரும், 'சிங்கள அமர்க்களம்' என்றும் 'இந்திய அரசே இன்னுமா உறக்கம்?' என்றும் இலங்கையின் தற்கால நிலையை விளக்கி நூல்கள் வடித்திருந்தவருமாகிய திரு. ப. அருளி அவர்கள், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் (P.L.O.T.) பொதுச்செயலாளர் திரு. முகுந்தன் என்னும் உமா மகேசுவரன கலந்துகொள்ள இயலாதவாறு வெளிநாடு சென்றுவிட்டமையால், 'தமிழீழ விடுதலைப் போராட்டம்' எனும் தலைப்பின்கீழ் இலங்கையில் சிங்களரின் ஆளுமை வெறியினையும், தமிழ் மக்களின் இன அழிப்பு நிலைகளையும் அரிய பல சான்றுகளைக் கொண்டு விளக்கப்படுத்தினார்.

இலங்கை தலைமையமைச்சர் திரு. செயவர்த்தனே முகமதிய தாய்க்கும், கிருத்தவ தந்தைக்கும் பிறந்த ஒரு மனநோயாளி என்றும், தம்மைப் புத்த மதத்தினருக்குச் சார்புடையவராகக் காட்டிக் கொள்ள வேண்டும் என விரும்பித் தமிழருக்குக் கொடுமைகளைச் செய்த கொடியவன் என்றும் அந்நாட்டின் வல்லாளுமைக்கும், போர்ச் செலவிற்கும் இறைக்கப்படும் கோடிக்கணக்கான உருவாக்களைக் கணக்கிட்டு அதன் பட்டியலைப் படித்துவிட்டுச் சிங்கள இனத்தின் பல உள்முரச் சிக்கல்களை எடுத்து விளக்கப்படுத்தினார்கள்.

ஏறத்தாழ இரண்டரைமணிநேர அளவிற்கு அளாவி அத்தனைச் செய்திகளையும் வெளிப்படுத்திய பாங்கு தமிழின உணர்வாளர் அனைவர்க்கும் பயனுடையதாக அமைந்தது.

திரு அருளி அவர்களின் பொழிவிற்குப் பின்னர், கழக முதல்வர் ஐயா அவர்கள் சில விளக்கவுரை கொடுக்கும் பொருட்டு ஒரு பணிநேரம் தமிழினத்தைத் தட்டி எழுப்பும் உணர்வு உரையாற்றினார்கள்.

ஒட்டுமொத்தமான இன முன்னேற்றம் இல்லாமல் தமிழினம் இருப்பதை விளக்கப்படுத்திவிட்டு அவ்வினப் படிநிலை வளர்ச்சியின் தேவையை எடுத்துக் கூறினார்கள்.

அறிவு அல்லது கொள்கை வேறுபாடு என்பது ஒன்றுமற்றது; அஃது அறிவு தெளிவாக ஆக மறைந்துவிடும். ஆனால் அது மன வேறுபாடாக மாறிவிடக்கூடாது; அம் மன வேறுபாடு உருக்கொள்ளுமானால் இனம் அழியும். சாதி, மதம் இரண்டும் தாம் அவ் வேறுபாடுகளை வளர்க்கின்றன- என்று கூறி ஒன்பதரை மணியளவிற்கு ஐயா தம் பேச்சை முடித்துக்கொண்ட பின்னர் அனைவர்க்கும் உணவு படைக்கப் பெற்றது. (தொடரும்)

தில்லியில் ஒலித்த குரல்!

"இன்றைய தமிழ்மக்களின் நாகரிகமும், எழுதப் பெற்றுவரும் புதினங்களும், காட்டப்பெறும் திரைப் படங்களும இன்னபிறவும் தமிழாக இல்லை. தமிழை அழிக்க, அதன் தொன்மைப் பெருமையைத் தொலைக்க ஒரு கூட்டம் திரண்டு அணிவகுத்துக் கிளம்பிவிட்டது.

தமிழை எப்படிக் காப்பாது, தமிழுக்கு நேரும் இடையூறுகளை எங்ஙனம் தகர்ப்பது, என்பன நாம் சிந்திக்க வேண்டிய கருத்துகள் ஆகும்.

நமது பேச்சு வழக்கில் 26 மொழிகளைச் சார்ந்த 2011 சொற்கள் பரவலாக ஊடுருவித் தமிழ்ச் சொற்களை நாம் புறக்கணிக்கும் நிலையை உண்டாக்கிவிட்டன. இதனை மொழியியல் நோக்கில் ஆழ்ந்து வழக்கறிஞர் ப. அருளி அவர்கள் 'இவை தமிழல்ல' என்ற பெயரில் ஒரு நூலையே வெளியிட்டுள்ளார்கள்.

சீர்காழி கோவிந்தராசன் போலும் தமிழரின் காசைச் சுரண்டி வாழ்வோர் நிகழ்த்தும் இசை நிகழ்ச்சிகளில் தமிழ், தமிழினம், தமிழ்நாடு பற்றிய ஒரு பாடலேனும் இடம்பெறுவது இல்லையே இதைக் கண்டிக்கும் திறன் எவருக்கேனும் உண்டா?

'தமிழிசையைப் பாடும்போது பிறர் என்னை மலத்தைப் பார்ப்பதுபோலப் பார்த்தார்கள்' என்று இசையரசு தண்டபாணிதேசிகர் அவர்கள் ஒருமுறை உளம் வெதும்பிக் கூறினரே! இன்னும் அத்தகு எண்ணங்கள் மறைந்தபாடில்லையே!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தொடர்ந்து நடத்திவரும் தென்மொழியும் அவரது தனித்தமிழ் இயக்கமும் மட்டுமே தமிழை வளர்த்துவிடும் என்று நாம் எண்ணி ஒதுங்கிவிடக் கூடாது. கற்றறிந்த தமிழ்ப்பேராசிரியர்கள் அனைவரும் இதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும்.

200; 300 ஆண்டுகளுக்குப் பின்னால் தமிழின் நிலை எப்படியிருக்கும் என்று எண்ணிப்பார்க்கவே அச்சமாக இருக்கிறது.

வணிக நிலையங்களின் விளம்பரப்பலகைகளில் உள்ள வேற்றுமொழிச் சொற்களைக் களைய நாம் முனைப்புடன் செயல்பட வேண்டும்.

இத்தகைய தமிழ்க்காப்புப் பணிகளில் நாம் இனியும் தயக்கம் கொள்ளாது ஈடுபடவேண்டியது நம் போன்றோரின் இன்றியமையாத கடனாகும்.'

— 1984 சூன் 1, 2-ல் தில்லியில் நடைபெற்ற இந்தியப் பல்கலைத் தமிழாசிரிய மன்றக் கருத்தரங்கை யொட்டிய தில்லித் தமிழ்ச்சங்க வரவேற்பில் பங்கேற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர், முனைவர். பேரா. ஆறு. அழகப்பனார் அவர்கள் ஆற்றிய உரையின் சில பகுதிகள்.

நேரில் கேட்டு எழுதியவர்: கடலூர். மணிமாறன்.

"அண்ணா!"

"என்ன தம்பி?"

"உலகத்திலுள்ள இலக்கியங்களில் பத்தில் ஒன்பது பங்கு எட்டே மொழிகளுக்கு உரியவை என்று சொல்கிறார்களே!"

"அப்படியா? அந்த எட்டு மொழிகளில் தமிழும் ஒன்று தானே?"

"அதுதான் இல்லை! ஆங்கிலம், பிரெஞ்சு, சப்பானியம், இசுபானிசு, உருசியா, செருமன் இத்தாலி, சீனம என்பவைதாம் அந்த எட்டு மொழிகளாம்."

"சப்பானிய மொழியும் இசுபானிசு மொழியும் பெற்றிருக்கும் பெருமைகூட தமிழுக்கு இல்லையாமா?

"இருக்கிறது. மிகச் சிறந்த இலக்கிய வளமும் பாவியக் குவியலும் உடைய மொழிதான் தமிழ்! என்றாலும் அஃது உலகத்துக்குத் தெரியவில்லையே ஏன் அண்ணா!"

"சொல் தம்பி"

"தன் கையில் தங்கக்கட்டியை வைத்துக் கொண்டிருந்தும், பிறர்கையிலுள்ள பித்தளைத் தகட்டைப் போய்ப் பார்த்துப் பல்லிளித்துப் பாராட்டும் பேதைமை உடையவர்களாகத் தமிழர்கள் இருப்பதனால் தானே?!"

"எனக்குத் தெரியாது தம்பி!"

ஆர்ப்பாரிப் பின்னும் அடங்க வில்லையே!

தமிழீழ-தமிழின விடுதலை விளக்கப் பொதுக் கூட்டம்

தி.பி. 2015, ஆடவை 27, (11-7-84) அறிவன் கிழமை இரவு 7-00 மணியளவில் மதுரை மாவட்டம் தேவாரத்தில் தமிழீழ-தமிழின விடுதலை விளக்கப் பொதுக்கூட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. தேவாரம் உழவர்கள் உரிமைக் கழகத் தலைவர் திரு. மு. விருமாண்டி தலைமையேற்றார். தே. மீனாட்சி புரம் பாட்டாளிகள் நடுவப் பொருளர் திரு. கோ. மகாலிங்கம் யாவரையும் வரவேற்றார்.

திரு. குமரவேல் 'பா'வுரை படித்தார். தொடர்ந்து,

பாவலர்	சுப்பிரமணி,
,,	மருதமுத்து
திரு.	இரா. கணேசன்,
,,	அ. தங்கமணி,
,,	முல்லைப்பாண்டியன்,
,,	வைரமுத்து
திட்டக்குடி ,,	தர்மலிங்கம், க.மு., ஆகியோர்

உரையாற்றினர்.

அடுத்து, உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலர் திரு. தென்னவன்கோ, க.மு., அவர்கள்,

"இந்தியாவில் வெடித்துக்கிளம்பும் தேசிய இனங்களின் விடுதலை எழுச்சியை எவராலும் தடுத்து நிறுத்திவிடமுடியாதென்றும், படை, காவல் துறையின் துணைகொண்டு மக்களின் உரிமைப் போராட்டங்களை அடக்கியொடுக்கும்பார்ப்பனிய-முதலாளிய-வடநாட்டுத் தில்லிப் பேரரசைக்-கருவறுக்கும் மக்கள் போராட்டத்தின் வழியே வீழ்த்துகின்ற தமிழக விடுதலைப் போராட்டம் தொடங்கப் பெற வேண்டுமென்றும், இந்தியாவிற்கே தமிழகம் வழி காட்டுமென்றும்" கருத்தறிவித்தார்.

திரு. இன்பராசு. (1) தமிழீழ விடுதலைப் புரட்சிக் குழுக்கள் யாவும் ஒன்றிணைய வேண்டுமென்றும் (2) மக்களைச் சார்ந்து நின்று, சிங்களக் கொடுங்கோலரசின் கருவிகளைப் பறித்தெடுக்க வேண்டுமென்றும், (3) தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இரண்டகம் செய்யும் அமிர்தலிங்கம், இராசதுரை, தொண்டைமான் கும்பல்களின் முகத்திரை கிழித்து அம்பலப்படுத்த வேண்டுமென்றும், (4) பாராளுமன்றத்தில் பதவி வேட்டையாட விரும்பும் முதலாளிய-நிலக்கிழமை அடிவருடி அரசியல் காரர்களை மக்களுக்கு இனங்காட்டிக் கொடுக்க வேண்டுமென்றும். (5) தொண்டைமான் தொல்லையில் வதைபடும் தோட்டத் தொழிலாளர்களை விடுவித்துத் தமிழீழ விடுதலைப் போரில் பங்கு பெறச் செய்து தமிழீழ விடுதலைப் போரை விரைவு படுத்த வேண்டுமென்றும் தீர்மானங்கள் படித்தார்.

தொடர்ந்து ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி-யைச் சார்ந்த திரு. ஈழமணி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நிலைகளை விளக்கினார்.

இறுதியாக, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா. இலெ) மக்கள் போரியக்கத் தலைவர் திரு. புலவர் கனிய பெருமாள் அவர்கள்,

தமிழ்த் தேசிய இன விடுதலையின் முகாமை குறித்தும், அதன் உடனடித் தேவை குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழின விடுதலைச் சிந்தனையை வினத்த வகையில் அப்பகுதியில் நடைபெற்ற முதற் கூட்டமெனப் பொதுமக்கள் பேசிக் கொண்டனர். இரவு 12.00 மணியளவில் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய படக்காட்சியுடன் தமிழீழ-தமிழின விடுதலை விளக்கப் பொதுக் கூட்ட நிகழ்ச்சிகள் இனிதே நிறைவெய்தின.

— செய்தி நெடியோன்

"மெய்யே சொல்வேன் - செய்வேன்" என்பவர்!

உ.த.மு.க. முதன்மை அலுவலகத் திறப்பு விழாவிற் கலந்து கொண்ட 'தமிழ்ப்பொழில்' அதனைச் சந்தித்தேன். மலேசியாவின் ஈப்போவிலிருந்து நாற்பத்தைந்து ஆண்டுகட்குப் பிறகு தமிழ்நாடு வந்த அப் 'பொழில்' எது?

ஆயிரம் 'தென்மொழி' அன்பர்களை அழைத்தும் நிழல்தந்தும் குளிர்வித்த அப்பொழில் சா. சி. சுப்பையா ஆவர். 'பாவாணர் மன்றத் தலைமை' கொண்டவர். 1940-இல் பாவாணரை இனம் கண்டு பாராட்டி வந்தவர். அவர் பெயரைச் சொல்லி வந்த வரை வரவேற்று வாழ்த்தியவர் அவர்தம் முயற்சியில் விளைந்த தமிழ்க்கதிர்கள். 'எல்லோன்' தங்கராசன், முத்துப்பாண்டியன் எனப் பலர்! இவர்களின் ஆசானாக விளங்கும் அருமை 'சா. சி. சு' அவர்கள் குறிஞ்சிக் குமரனாக' இளமையுணர்வோடு 'தமிழ்' பயிலும் மாணவராக விளங்குகின்றார்கள்!

'பாவாணரை' அகக்கண்ணிலே கண்டு வழிபட்டு வந்த பாவலர் குறிஞ்சிக் குமரனாரின் குறை 'பாவாணரை நேரில் தமிழ்மண்ணில் வந்து காண ஒரு முறைதானும் முடியவில்லையே' என்பதுதான்!

மக்கள் உவந்து மொழிஞாயிறென ஏற்றுக் கொண்ட பாவாணரை எண்ணி எண்ணி மகிழும் அவர்கள், ப. அருளியாரை மலேசியா அழைத்துச் சிறப்பிக்கும் நாள்வரும்!

தனிவாழ்வின் நிறைகளைச் செப்பித் திரியும் 'தான்தோன்றித் தனத்தை' வெறுக்கும் இவ்வறிஞர், 'தமிழின விடுதலைக்காக வாழ்நாளை ஈகம் பண்ணும் தமிழ்நாட்டன்பர்களின் ஒற்றுமைக்காகத் தமிழ்நாட்டின் தம் வருகையைப் பயன்படுத்தி வருகிறார் என அறிந்து மிக மகிழ்ந்தேன்! அஃதன்றித் தமிழர்தம் விடுதலை வேட்கை, போர்க்குணம் பாராட்டப் பெறுவதிலும், அவை வரலாறாக வேண்டும் என்பதிலும் அவர் காட்டிய ஆர்வம் சிறப்புடையது!

தமிழின் பேரைச் சொல்லிப் பிழைப்பு நடத்த மலேசியா வரும் போலிகளை எதிர்ப்பதில இம் முதறிஞர் இளைஞர் முனைப்பாகவுள்ளார். தமிழரின் மெய்யறிவில் பற்றுடைய இவர் மலேசியாவில் பெற்ற ஊதியம் தமிழ்க் காதலே—தமிழர் பாராட்டே!

பொன்னும் மணியும் திரட்டக் கடல் கடக்கும் பலரை அறிவோம்—தமிழர் வாழும் நாடெங்கும் தமிழும் பண்பாடும் தழைக்க உழைக்கும் மெய்யன்பர் இவர்போன்றோர் இருப்பதாலேயே 'இருந்தமிழும் இருக்கிறது' போலும்! அவரை ஆற்றுப்படுத்தி அறிமுகம் செய்த தோழர் மலேசியா இராமையா நன்றிக்குரியவர்! பல்வேறு வழியில் நடக்கும் தமிழர் யாவரும் ஓரின உணர்வில் ஒன்றுபடுவர் என்ற நம்பிக்கை தழைத்த குறிஞ்சிக் குமரனாரை 'உலகத் தமிழின முன்னேற்றக் கழக' உறவின் முறையினர் வாழ்த்தி வரவேற்கிறோம்! அன்புடன்,

— பறம்பை அறிவன்

ஆங்கிலத்தில் இந்தியா!

மொழிபெயர்ப்பில் பாரதமா?

'State Bank of India' என்பதற்கு அந்த வைப்பகத்தார் தமிழில்

'பாரதிய ஸ்டேட் பாங்கு' என மொழி பெயர்த்துள்ளனர்.

நல்ல தமிழில் 'இந்திய அரசு வைப்பகம்' என்றிருத்தல் வேண்டும். அந்த அளவுக்கு இல்லாவிடினும் 'இந்திய மாநில அரசு வங்கி' என்றாவது பெயர்த்திருக்க வேண்டும்.

ஆங்கிலத்தில் 'இந்தியா'—பெயர்க்கும் போது 'பாரதீய'மாகத் தமிழில் மாறுவது ஏன்?

— மணிமுத்து —

மறைமலையடிகளார் பற்றி வானொலி

கடந்த 15-7-84ஆம் பக்கல் ஞாயிறு மாலை 5.35க்கு மறைமலையடிகளாரின் 'பிறந்த நாளினை முன்னிட்டு அவரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்துரைத்த மூனைவர் கே. நம்பி ஆரூரன் அவர்கள்.

தனித்தமிழ் இயக்கங் கண்ட வரலாற்றை விளங்கச் சொல்லி வந்தவர், அவ்வியக்கத்தின் இக்கால் நிலைகளைப் பற்றி எதுவும் கண்டு கொள்ளாது உள்ள போங்கு கண்டிக்கத் தக்கதாகும். ஆனால், காஞ்சி சங்கராச்சாரிகளில் ஒருவர் ஆயிரம் உருவா அடிகளாரின் வடமொழி நூல் பெயர்ப்பாகிய 'சாகுந்தலை' நாடகச் சிறப்புக்காகப் பரிசு கொடுக்கினார் என்பதைச் சொல்லத் தவறவில்லை.

இப்பாங்கு நமக்கு உணர்த்துவது:

1. வடமொழி நூலொன்று தமிழில் மொழிபெயர்க்கப் பட்டவுடன் அதைப் போற்றி ஊக்கும் போங்கு, அவரைப் பற்றி அடையாளம் காட்டுகிறது.
2. வானொலி முழுக்கமுழுக்க பார்ப்பனர் ஆளுமை நிரம்பி வழிகிறது என்பதையும், தமிழர்களே அடிவருடிகளாகிப் போன நிலையும் உணர்ந்து கொள்ள வேண்டியவை.
3. மறைமலையடிகளாரின் நூற்களைப் பாதுகாக்கும் சைவ சித்தாந்தப் பதிப்பகக் குழுத் தலைவர், இதழ் பற்றிய செய்திகள், நூலகம் பற்றிய செய்திகள், அவர் பெயர் மன்றம், அச்சகம் பற்றிய செய்திகள் போன்றும் பல உண்மைச் செய்திகளை வேண்டுமென்று திட்டமிட்டு மறைக்கப்பட்டதாகவும் உணர வேண்டியுள்ளது. இவை ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்களுக்கு சான்றும் அன்றோ? — தமிழ்வென்றி

உணர்வாளர்கள் உறுதிமொழி கேட்டு ஒரு மடல்

'தமிழ்நிலம்' தமிழ்த்தேசிய இனவுணர்வாளர்கள் ஒன்றுசேர வேண்டும்' எனக் கேட்கிறது. இதற்கான முயற்சிக்கு ஒருசில கருத்துகளைத் 'தமிழ்நிலம்' அன்பர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1. பல்வேறு துறைகளில் செயல்படும் உணர்வாளர்களுடன் மடல் தொடர்புகொண்டு கருத்தறிதல் வேண்டும்.

2. 'இனவுணர்வு' ஏன்? என்ற வினாவிற்கு விளக்கம் எழுதுங்கள்.

3. அரசியல், பொருளியல் துறையில் உள்ள போலிமைகளை எடுத்துக் காட்டுங்கள்.

4. 'தேசியம்' உலகியத்திற்கு எதிரானதன்று என்பதை விளக்கிட முயலுங்கள்.

5. 'சிறுபான்மை அச்சம்' பற்றிய மெய்விளத்தங்களைத் தொகுத்துத் தந்திடுங்கள்.

அன்பர்களின் உள்வட்டத்தில் ஒரு திறன் அறியும் ஆர்வத்தை வளர்த்தெடுங்கள். அவர்களிடையே அஞ்சல் தொடர்பை முடுக்குங்கள்.

அண்மையில் உள்ள உணர்வாளர்களை அழைத்துக் கலந்துரையாடுங்கள். முடிவுகளை அப்படியே பரப்பி மக்கள் கருத்தைத் திரட்டிடுங்கள்.

தமிழ்நிலத்தின் உழவர் மக்களை ஒன்றுதிரட்டுங்கள். அவர்களின் வாழ்நிலை மாற்றத்திற்காக அணிதிரட்டுங்கள். ஏனெனில் அவர்களை அடிப்படையாகக்கொண்டே நம்வாழ்க்கையின் அச்சுசுழல்கிறது.

இன்று, பஞ்சாபின் 'ஆற்றுநீர்ச் சிக்கல்' 'மதம்' ஆக்கப்பட்டுவருகிறது. உழவர் சிக்கலைத் தீர்ப்பதில் 'இனவுணர்வு' திரண்டெழ வேண்டும். ஆம், தமிழ்நாட்டு விளைவுக்கு அவர்களின் துணைவலி வேண்டும்! எங்கே.........'தமிழின' உணர்வுள்ள பல்வேறு 'விளைபுலன்களை' அமைப்பாகக் கட்டியெழுங்கள் பார்ப்போம்!

அதற்கு நாம் சாதி—மதம் தொலைத்து, உலகியலுக்கு உவப்பான தேசியவுணர்வை எழுப்புவோம்!

— பறம்பை அறிவன்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: NT/MS(C)/657

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருத்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

நூல்-அஞ்சல்

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்
கழக-அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.